முற்பகல் 11-45

3. விதி 111-ன்கீழ் முதலமைச்சரின் அறிக்கை

25-04-2003 மற்றும் 29-04-2003 ஆகிய நாட்களில் தமிழ்மொழியில் அரசமைப்புச் சட்டம் பற்றித் தெரிவித்ததற்குத் திருத்தம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 111-ன் கீழ் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திருத்த அறிக்கை ஒன்றினை அளிக்க அனுமதி கோரி உள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 111-ன் கீழ், கீழ்க்கண்ட திருத்த அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்:

25-04-2003 மற்றும் 29-04-2003 ஆகிய நாட்களில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தில், தமிழ் மொழியில் அரசமைப்புச் சட்டத்திலேயே, பெண்களுக்கு ஒரு பெரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது முதலானவை குறித்து, நான் பேசியவற்றிற்கு கீழ்க்கண்ட திருத்த அறிக்கையை இப்பேரவைமுன் அளிக்கின்றேன்:

'தமிழ் மொழியின் அரசமைப்புச் சட்டத்திலேயே, பெண்களுக்கு ஒரு பெரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது. பொதுவாக, ஒரு உறுதிமொழியை ஏற்கும்போதுகூட, உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி ஏற்கும்போது, "இந்தியக் குடிமகன் ஆகிய நான்" என்று கூறியே இந்த உறுதிமொழியை ஏற்கும் நடைமுறை உள்ளது. "குடிமகள் ஆகிய நான்" என்று கூறி உறுதிமொழி எடுக்கக் கூடாதா என்று போராடி இருக்கிறேன். "குடிமகன்" என்று கூறித்தான் உறுதிமொழி ஏற்க வேண்டும் என்பதே பெண் குலத்துக்கு இழைக்கப்பட்ட அநீதி, "குடிமகள்" என்ற சொல் புழக்கத்திற்கு வருவதற்காக பெரிய இயக்கமே நடத்தத் தீர்மானித்து இருக்கிறேன்.'

இதனை அவைப் பதிவேடுகளில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.